

இராயபுரம் கிழக்குப் பகுதி 51வது வட்ட முன்னாள் செயலாளர் க.சேகரன் அவர்களின் திருவுருவப்படத்தை கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தினார். உடன் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஐட்ரீம் மூர்த்தி, ந.மனோகரன், பி.டி. பாண்டிச் செல்வம், இரா.செந்தில்குமார், வே.சிவகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### தி.மு.க. வர்த்தகர் அணி

# மாநில, மாவட்ட அமைப்பாளர் - தலைவர்கள் கூட்டம்!

## தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் - தலைவர்கள் கூட்டம் 31-05-2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது (காசிமுத்து மாணிக்கம்) தலைமையில், வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலைராஜா, வி.ஜெயன், நா.முருகவேல், பி.டி.பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர். எஸ்.உமரிசங்கர், வர்த்தகர் அணி துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துசாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், த.வனராஜ், வி.பி.மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ. சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கே.வி.எஸ்.சீனிவாசன், பி.டி.அன்பரசன், ஜெ. பாலகங்காதரன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட மற்றும் மாநில அமைப்பாளர்கள் - தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா

கழக ஆக்கப் பணிகள் - குறித்து

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 25.05.2026

**காசி முத்துமாணிக்கம்,**
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி

### கிருஷ்ணகிரி மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில்

# மாவட்ட ஆட்சியருடன் அமர்ந்து மனு வாங்கிய த.வெ.க. எம்.எல்.ஏ.!

## விதிமுறை மீறல் ! அதிகாரிகள்- பொதுமக்கள் அதிர்ச்சி !

*கிருஷ்ணகிரி, மே 27-*

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் (எம்.எல்.ஏ) முகுந்தன், மாவட்ட ஆட்சியரின் இருக்கைக்கு அருகில் அமர்ந்து பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்ற விவகாரம் அரசு அதிகாரிகளிடையே பெரும் சலசலப்பையும், அரசியல் வட்டாரத்தில் விவாதத்தையும் ஏற்படுத்தியுள்ளது.



**வாராந்திர குறைதீர்க்கும் நாள் கூட்டம்:**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று வாராந்திர மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுவது வழக்கம். இந்த கூட்டத்தில் மாவட்டத்தின் தொலைதூர கிராமங்களில் இருந்தும், நகர்ப்புற பகுதிகளில் இருந்தும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் குடிநீர், சாலை வசதி, முதியோர் உதவித் தொகை, பட்டா மாறுதல் மற்றும் நில ஆக்கிரமிப்பு உள்ளிட்ட பல்வேறு புகார்கள் மற்றும் கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை மாவட்ட ஆட்சியரிடம் நேரடியாக வழங்குவார்கள்.

வழக்கம்போல, நேற்று காலை 10 மணியளவில் மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் தலைமையில் குறைதீர்க்கும் நாள் கூட்டம் தொடங்கியது. மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பல்வேறு அரசுத் துறைகளின் முதன்மை அதிகாரிகள் கூட்டத்தில் பங்கேற்று, பொதுமக்களின் மனுக்களைப் பெற்று உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கான பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

கூட்டம் விறுவிறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில், கிருஷ்ணகிரி தொகுதி தவெக எம்.எல்.ஏ முகுந்தன் தனது ஆதரவாளர்களுடன் திடீரென கூட்டரங்கிற்குள் வருகை தந்தார். பொதுவாக, மக்கள் பிரதிநிதிகள் தங்களின் தொகுதி மக்களின் கோரிக்கைகளை மனுவாக எடுத்து வந்து ஆட்சியரிடம் கொடுத்துவிட்டுச் செல்வதே வழக்கம்.

ஆனால், எம்.எல்.ஏ முகுந்தன் நேரடியாக மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் அமர்ந்திருந்த மேடைக்குச் சென்று, அவரது இருக்கைக்கு மிக அருகில் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

**மாவட்ட ஆட்சியர் அமைதி; அதிகாரிகள் சலசலப்பு:**

அரசு விதிமுறை களின் படி, குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனுக்களைப் பெற்று தீர்வு காண்பதற்கான முழு அதிகாரமும் மாவட்ட நிர்வாகத்தின் தலைவரான ஆட்சியருக்கும், அதிகாரிகளுக்குமே உண்டு. மக்கள் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் சரிசமமாக அமர்ந்து மனுக்களைப் பெறுவது வழக்கமான நடைமுறை அல்ல என்று கூறப்படுகிறது.

எம்.எல்.ஏ முகுந்தன் நாற்காலியில் அமர்ந்ததோடு மட்டுமன்றி, வரிசையில் நின்ற பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை நேரடியாக வாங்கி, அதுகுறித்து அங்கேயே விசாரித்து அதிகாரிகளுக்கு உத்தரவிடத் தொடங்கினார்.

இந்த எதிர்பாராத அதிரடி நடவடிக்கையைக் கண்டு கூட்டரங்கில் இருந்த பிற துறை அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

இருப்பினும், மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் இதுகுறித்து எவ்வித எதிர்ப்போ அல்லது மறுப்போ தெரிவிக்காமல் அமைதி காத்தார். ஆட்சியரே அமைதியாக இருந்ததால், அதிகாரிகள் யாரும் நேரடியாகக் கேள்வி எழுப்ப முடியாமல் தங்களுக்குள் முணுமுணுத்தபடி இருந்தனர். இதனால் கூட்டரங்கில் ஒருவித சலசலப்பான மற்றும் பரபரப்பான சூழல் நிலவியது.

**ஒரு மணி நேர விவாதம்:**

அதிகாரிகளின் சலசலப்புக்கு மத்தியிலும், எம்.எல்.ஏ முகுந்தன் சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக ஆட்சியரின் அருகிலேயே அமர்ந்து பொதுமக்களின் மனுக்களைப் பெற்று, அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார். தொகுதி மக்களின் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காண வேண்டும் என்று அதிகாரிகளிடம் வலியுறுத்திய பின்னர், அவர் கூட்டரங்கில் இருந்து புறப்பட்டுச் சென்றார்.

**விவாதப் பொருளாக மாறிய விவகாரம்:**

அரசு நிர்வாகக் கூட்டத்தில், த.வெ.க. எம்.எல்.ஏ மாவட்ட ஆட்சியருக்கு இணையாக அமர்ந்து மனுக்களை வாங்கிய இந்த சம்பவம் தற்போது சமூக வலைத்தளங்களிலும், கிருஷ்ணகிரி மாவட்ட அரசியல் மற்றும் அரசுத் துறை வட்டாரங்களிலும் பெரும் விவாதப் பொருளாக மாறியுள்ளது.

"மக்களின் குறைகளை நேரடியாகக் கேட்டுத் தீர்ப்பது மக்கள் பிரதிநிதியின் கடமை" என்று ஒரு தரப்பினரும், "அரசு நிர்வாக நடைமுறைகளையும், நெறிமுறைகளையும் மீறி இவ்வாறு செய்தது முறையல்ல" என்று மற்றொரு தரப்பினரும் தங்களது கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

### நீலகிரி மாவட்டத்தில் ஜூன் 3 - "புத்தெழுச்சி நாள்"

# முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் பிறந்தநாள் விழா!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எம்.ராஜு எம்.எல்.ஏ., அறிக்கை.!

*உதகை, மே 27-*

நீலகிரி மாவட்டப் பொறுப்பாளர் கே.எம். ராஜு எம்.எல்.ஏ., விடுத்துள்ள அறிக்கை வருமாறு:



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இறுதி வரை திராவிட இயக்கத்தின் பாதுகாவலராக இருந்து, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரது கொள்கைகளை காத்து உழைத்து, முதுபெரும் அரசியல் தலைவராக செயலாற்றி வரலாறு படைத்தார்கள்.

நம் இதயத்தில் வீற்றிருக்கும் நம் அனைவரின் ஒப்பற்ற தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளான ஜூன்3ம் நாள் நம் அனைவருக்கும் "புத்தெழுச்சி நாளாக" அமையட்டும்.

அந்நாளில், மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலயம் முன்பு உள்ள கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கும், நீலகிரி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு நகர - ஒன்றிய பேரூர் மற்றும் அனைத்து கிளை கழக பகுதிகளிலும் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படங்களை அலங்கரித்து வைத்து, மலர்தூவி மரியாதை செலுத்தி, கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கியும், பல்வேறு நலத்திட்ட உதவிகள், முதியோர் இல்லங்களில் உணவுகள் வழங்கி மிக சிறப்புடன் கொண்டாடிட வேண்டும்.

இதேபோல், ஜூன் மாதம் முழுவதும் ஏழை எளிய மக்கள் பெரிதும் பயனடைந்திடும் வகையில் நலத்திட்டங்கள் வழங்கியும், தலைவர் கலைஞர் அவர்களின் சிறப்புகளை பொதுமக்களுக்கு கொண்டு சேர்த்திடும் வகையில் பொதுக்கூட்டங்கள், தெருமுனை பிரச்சார கூட்டங்கள், உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை மாவட்டம் முழுவதும் வெகு விமர்சையாக நடத்திட வேண்டும் என மாவட்டத்திலுள்ள கழகத்தினர் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஈரோடு மாநகராட்சியில் பகுத்தறிவு பகலவன்

# தந்தை பெரியாரின் படம் அகற்றம்!

## மாநகராட்சி அதிகாரிகளின் அட்டூழியம் !

*ஈரோடு, மே 27-*

ஈரோடு மாநகராட்சியில் மாமன்ற உறுப்பினர்கள் கூட்டரங்கில் பகுத்தறிவு பகலவன், சமூக நீதி காவலர் தந்தை பெரியார் அவர்களின் படம் மாநகராட்சி அதிகாரிகளால் அகற்றப்பட்டது. இந்த சம்பவம் கண்டனத்திற்குரியது.

ஈரோடு நகர் மன்றத்தில் நகர்மன்ற தலைவராகவும், மிகச் சிறந்த பகுத்தறிவாளராகவும், ஈரோடு பொது மக்களுக்கு காவிரி ஆற்றில் இருந்து குழாய்கள் மூலம் இல்லங்களுக்கு குடிநீர் வழங்கியவர் தந்தை பெரியார். அவரது படத்தினை உடனடியாக மாநகராட்சி கூட்ட அரங்கில் வைக்க வேண்டும் என ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர், மாநகராட்சி ஆணையாளர் ஆகியோர்களுக்கு மாநகராட்சி 1வது மண்டல தலைவரும், ஈரோடு தெற்கு மாவட்ட கழக பொருளாளருமான ப.க.பழனிச்சாமி தனது கண்டன அறிக்கையை அளித்தார். உடனடியாக தந்தை பெரியாரின் படத்தினை வைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் மாவட்ட கழக செயலாளர் சு.முத்துசாமி அவர்களின் ஆலோசனைப்படி போராட்டம் நடைபெறும் என மண்டல தலைவர் ப.க. பழனிசாமி கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தொ.மு.ச. மாவட்ட கவுன்சில் நிர்வாகிகள் கூட்டம்!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் அறிவிப்பு!

சென்னை திருவள்ளூர் - காஞ்சிபுரம் - செங்கல்பட்டு மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் நிர்வாகிகள் கூட்டம் நாளை (28.05.2026-வியாழக்கிழமை) மாலை 3.00 மணியளவில் சென்னை தொ.மு.ச. பேரவை தலைமை அலுவலகமான "கலைஞரகத்தில்" தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மேற்கண்ட மாவட்டங்களைச் சேர்ந்த மாவட்ட கவுன்சில் அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கூட்டத்தில் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: 1) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா, 2) கூட்டத் தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் பிரச்சினைகள்

குறிப்பு: மேற்கண்ட மாவட்ட கவுன்சில் செயலாளர்கள் அனைவரும் தங்கள் மாவட்டத்தில் உள்ள கவுன்சில் நிர்வாகிகள் அனைவருக்கும் தகவல் தெரிவித்து கூட்டத்தில் அவர்கள் பங்கேற்பதற்கான ஏற்பாடுகளை செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**இடம்: கலைஞரகம்**
**நாள்: 25.05.2026**

**மு.சண்முகம்**
பொதுச் செயலாளர்
தொ.மு.ச. பேரவை

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# கோவை மணியன்

## மே 27 (2009)



**கழகத்தின் முன்னோடிப்பேச்சாளர்களில் ஒருவர். எளிமையானவர். பள்ளியில் படிக்கும்போதே பேச்சுப் போட்டிகளில் பலமுறை கலந்து கொண்டு சொல்லில் வல்லவனாகத் திகழ்ந்து பரிசுகள் பல பெற்றவர்.**

**கழக சொத்து பாதுகாப்புக்குழு உறுப்பினராக பணியாற்றியவர்.**

**மிசா காலத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர். கழகம் நடத்திய அறப்போராட்டங்களில் பங்கேற்று ஐந்து முறை சிறை சென்றவர்.**

**தாம் பங்கேற்ற பொதுக்கூட்டங்களைப் பற்றியும் அதனால் விளையும் பயன்களைப் பற்றியும் மாதந்தோறும் தவறாமல் தலைமைக் கழகத்திற்குப் பட்டியல் அனுப்புவதை தன் கடமையாகக் கொண்டிருந்தார்.**

**கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒருமுறை உடன்பிறப்புக்குத் தீட்டிய மடலில் இவரது பிரச்சாரப் பணியைப் பாராட்டியுள்ளார்.**

**இவருக்கு, தலைமைக் கழகம் சார்பில் 1998ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைவர் கலைஞர் அவர்கள் 'கலைஞர் விருது' வழங்கிசிறப்பித்தார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

# இராயபுரம் சி. நவமணி

## மே 27 (2012)



**இராயபுரம் பகுதிக் கழக அவைத்தலைவராகவும், தமிழக அனைத்து வணிகர்கள் சங்கத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**"தம்பி நவமணி என்னிடம் பாசமும், நேசமும் கொண்டவர். வணிகர்கள் சம்பந்தப்பட்ட எந்தப் பிரச்சினை என்றாலும் நேரில் என்னை வந்து சந்தித்து, அதுகுறித்து விவாதிக்க அவர் தவறியதே இல்லை. வணிகர்களுக்கும், கழகத்திற்கும் இடையே ஒரு பாலமாக செயல்பட்டவர்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**